# DEPOSITION OF WITNESS

(In the Court of the Subordinate Judge, Sankarankovil )

O.S.No. 68/2018

****

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW1 |
| Name | : எழில் அரசி |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : |

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இவ்வழக்கின் வாதி வங்கியின் துணை மேலாளர் ஆவேன். நான் வாதி தரப்பு முதல் சாட்சி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது. முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையெழுத்திட்டுள்ளேன். 18.12.2012 ம் தேதி வாதி வங்கியில் பிரதிவாதி கொடுத்த விண்ணப்பம் வா.சா.ஆ.1 ஆகும். 18.12.2012 ம் தேதி பிரதிவாதி, வாதி வங்கிக்கு பிறப்பித்துக் கொடுத்த ஒழுங்குமுறை பிணைய ஒப்பந்தம் வா.சா.ஆ.2 ஆகும். 18.12.2012 ம் தேதி பிரதிவாதி, வாதி வங்கிக்கு பிறப்பித்துக் கொடுத்த ஏற்பாடு கடிதம் அசல் வா.சா.ஆ.3 ஆகும். 20.10.2015 ம் தேதி பிரதிவாதி, வாதி வங்கிக்கு எழுதி கொடுத்த நிலுவை ஒப்புதல் கடிதம் அசல் வா.சா.ஆ.4 ஆகும். 17.03.2016 ம் தேதியில் வாதி வங்கி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.5 ஆகும்.

21.03.2016 ம் தேதியில் வாதி வங்கி வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொள்ள மறுத்து வாபஸ் வந்த அறிவிப்பு வா.சா.ஆ. 6 ஆகும். 30.11.2017 ம் தேதி பிரதிவாதி விவசாயக் கடன் எண்.32718656835 ACC and KCC க்குரிய ஸ்டேட்மெண்ட் நகல் வா.சா.ஆ.7 ஆகும். வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**